தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 4, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 17, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

செல்வம் ஒப்புரவு செய்யும் பெருந்தகையாளரிடம் சேரின், அது வேர்முதல் கொழுந்துவரை எல்லா உறுப்பும் பல்வேறு நோய்க்கு மருந்தாகித் தப்பாது பயன்படும் மரத்தையொக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா எண் 181, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

181—

அரசு கலைக் கல்லூரி

***20234—திரு. ப. இராஜரெத்தினம்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 17

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்பதை அனைவரும் அறிவோம். பெரம்பலூர் பகுதியில் பெரும்பான்மையாக தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கின்றதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, பெரும்பான்மையாக உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டும், மாணவ, மாணவியர்களின் நலனைக் கருத்தில்கொண்டும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே இந்தக் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியிலே அரசு கலைக் கல்லூரி அமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்வாரா என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் ஓர் அரசுக் கல்லூரியும், 6 சுயநிதிக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 7 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தின் அருகிலுள்ள திருச்சி மாவட்டத்தில் 3 அரசுக் கல்லூரிகளும், 9 அரசு உதவிபெறும் கல்லூரிகளும் மற்றும் 9 சுயநிதிக் கல்லூரிகளும் ஆக மொத்தம் 21 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பெரம்பலூர் பகுதியில் தற்போதுள்ள கல்லூரிகள், அங்குள்ள மாணவர்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், தேவையின் அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். அரசு நிதியுதவியின்றி கலைக் கல்லூரி திறப்பது குறித்து தனியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே பெரம்பலூர் பகுதியிலே, அரசு கலைக் கல்லூரி இருக்கிறது என்கின்ற பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள். பெரம்பலூர் மாவட்டத்திலே அரியலூர் பகுதியிலே கலைக் கல்லூரி இருக்கிறது. பெரம்பலூர் என்பது

2005 மார்ச் 17]

மாவட்டத்தின் தலைநகரமாகும். அங்கே மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அலுவலகம், காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் போன்ற மிக முக்கியமான அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்ற நிலையில், ஒரு அரசுக் கலைக் கல்லூரி இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்கின்ற கருத்திலே ஏழை, எளிய மக்களினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மாணவர்களினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மீண்டும் மறுபரிசீலனை செய்து பெரம்பலூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க முன்வருவாரா என்று தங்களின் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகளைத் திறப்பது என்பது, அந்தந்தப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தே இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏதாவது புதிய கல்லூரிகள் திறக்க வேண்டுமென்றால், பல்கலைக்கழகங்களே விண்ணப்பங்கள், கோரிக்கைகள் அனுப்பினால் அரசு அதைப்பற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 182, திரு. ராதாரவி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

182—

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்

***31114—திரு. ராதாரவி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட கலை மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படும் வகையில் தலைமை நிறுவனமாக தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை தலைமை நிறுவனமாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.